(ஆ) பூவிருந்தவல்லி முதல் கலங்கரை விளக்கம் வரை சென்னை மெட்ரோ இரயில் திட்டம் துவங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பூவிருந்தவல்லி முதல் கலங்கரை விளக்கம் வரை சென்னை மெட்ரோ இரயில் திட்டம் துவங்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்

அறிக்கை

சென்னைப் பெருநகரத்தின் அதிவேக வளர்ச்சியால், நாளுக்கு நாள் சாலைகளில் பெருகி வரும் வாகனப் போக்குவரத்தின் நெரிசல் காரணமாக, ஒரு பொதுப் போக்குவரத்து கட்டமைப்பு தேவைப்படுகின்றது. அதன் அவசியத்தை உணர்ந்து, நகரின் போக்குவரத்து மிகுந்த பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளை அடையாளம் கண்டு, சென்னை மெட்ரோ இரயில் என்ற இரயில் சார்ந்த பொதுப் போக்குவரத்தினை உருவாக்கிச் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்தது. இந்தத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத் தகுந்த, வசதியான, திறன்மிக்க மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது ஆகும். மேலும், இத்திட்டத்தினை இதர பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய பேருந்து,

[திரு. எம்.சி. சம்பத்] [2020 மார்ச் 21

புறநகர் இரயில்கள் மற்றும் தற்போதுள்ள பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டங்கள் உள்ளிட்ட இரயில் அமைப்புகளுடனும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–1–ன்கீழ் வழித்தடம்–1 வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை 23.1 கி.மீ. நீளத்திலும் மற்றும் வழித்தடம்–2 சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரை 22.00 கி.மீ. நீளத்திலும், இரண்டு வழித்தடங்களில் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு, பயணிகள் சேவை தற்போது நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர்/விம்கோ நகர் வரை 9.051 கி.மீ. நீளத்தில் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–1–ஐ நீட்டிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–2–ன்கீழ் 118.9 கி.மீ. நீளத்திலான வழித்தடங்கள்–3, 4 மற்றும் 5 ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான ஒப்புதலை மாநில அரசு ஜனவரி 2019–ல் வழங்கியுள்ளது. இதில் கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி புறவழிச் சாலை வரை 26.1 கி.மீ. நீளத்திலான வழித்தடம்–4–க்கான கட்டுமானப் பணிகள் மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவி மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் ஒப்புதல் ஆகியவை பெறப்பட்ட பின்னர் துவக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். எனக்கு திருப்தி அளிக்கவில்லை. சென்னையை சிங்கப்பூருக்கு இணையாக, சிங்காரச் சென்னையாக மாற்ற வேண்டும் என்று எங்களுடைய ஆட்சிக் காலத்தில், அன்றைய துணை முதலமைச்சராக இருந்த கழகத்தினுடைய தலைவர் அண்ணன் தளபதியார் அவர்கள், இந்த மெட்ரோ இரயில் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று திட்டமிட்டு, தன்னுடன் அதிகாரிகளை, வல்லுநர்களை எல்லாம் ஜப்பான் நாட்டுக்கு அழைத்துச் சென்று, ரூ.11,000 கோடி கடனைப் பெற்று இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாகத் தொடங்கி வைத்தார்கள். சென்னையில் இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, தொலைநோக்குப்

பார்வையோடு அன்றைக்கு மிகச் சிறப்பாக இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. நான் சார்ந்திருக்கக்கூடிய பூவிருந்தவல்லி தொகுதி, சென்னை புறநகரத்தில் ஒரு முக்கியமான hub ஆக இருக்கிறது. திருப்பெரும்புதூர் தொழிற்பேட்டைக்கும், திருமழிசையில் இருக்கக்கூடிய தொழிற்பேட்டைக்கும், காக்களூர் தொழிற்பேட்டைக்கும், அதேபோல் திருமுடிவாக்கம் தொழிற்பேட்டைக்கும், பெங்களூருவுக்கு வெளியே போகிற சாலையும், திருப்பதிக்கு போகிற சாலையும் இருக்கக்கூடிய, முக்கியமான கூட்ட நெரிசல் இருக்கக்கூடிய முக்கியமான hub ஆக இருக்கக்கூடிய பகுதி அது. சென்னையிலிருந்து அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றால், 2 மணி நேரம் ஆகிறது. பூவிருந்தவல்லியிலிருந்து சென்னைக்கு வர வேண்டுமென்றாலும், 2 மணி நேரம் ஆகிறது. இப்படிப்பட்ட கூட்ட நெரிசல் மிகுந்து இருக்கக்கூடிய இந்தச் சந்திப்பில், மிக விரைவில் மெட்ரோ இரயில் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட வாரம் இரண்டு முறை அந்தப் பக்கம்தான் செல்கிறார்கள். எனவே, முதல் பணியாக அதற்கு முன்னுரிமை கொடுத்து பூவிருந்தவல்லிக்கு நீங்கள் மெட்ரோ இரயில் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாளர்கள் RITES நிறுவனத்தினால் ஒரு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கையில் மொத்த நீள அளவு 118.9 கிலோ மீட்டர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டப் பணிகள் எல்லாம் முடிந்து விட்டன. வண்ணாரப்பேட்டையிலிருந்து விமான நிலையம் வரை 23.1 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மற்றும் சென்னை சென்ட்ரலிலிருந்து, புனித தோமையார் மலை வரை 22.00 கிலோ மீட்டர் நீளத்திற்கும் பணிகள் முடிந்து விட்டன. அந்த வழித்தடத்தில் சென்னை மெட்ரோ இரயிலில் நாளொன்றுக்கு கிட்டத்தட்ட 1 இலட்சம் பேர் பயணம் செய்கிறார்கள்.

இதற்கு அடுத்தபடியாக, வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர்—விம்கோ நகர் வரை 9.051 கிலோ மீட்டர்

[திரு. எம்.சி. சம்பத்] [2020 மார்ச் 21

நீளத்திற்கு திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு, முடிவுறும் தருவாயில் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுடன் கலந்து பேசியவுடன், மே மாதத்திற்குள்ளாக அந்தத் திட்டம் துவங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இரண்டாம் கட்டப் பணியாக, கிட்டத்தட்ட 118.9 கிலோ மீட்டர் நீளத்திற்கு வழித்தடங்கள் ஏற்படுத்துவதற்கு, திருவாளர்கள் RITES நிறுவனத்தால் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கு மாநில அரசு ஒப்புதல் கொடுத்து, பின்னர் மைய அரசும் ஒப்புதல் கொடுத்திருக்கிறது. அந்தத் திட்டத்தில் முதற்கட்டப் பணியாக, மாதவரத்திலிருந்து சோழிங்கநல்லூர் வரை, மாதவரத்திலிருந்து சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் வரை கிட்டத்தட்ட 52.01 கிலோ மீட்டர் நீளத்திற்கு வழித்தடங்களை அமைத்திட திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் மூலமாக நிதியுதவிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு இதற்கென ரூ.3,100 கோடி ஒதுக்கியுள்ளது. மத்திய அரசினுடைய 50 சதவிகித நிதியைக் கேட்டிருக்கிறோம். மத்திய அரசின் அந்தப் பங்கு வந்தவுடனேயே, உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் அந்தத் திட்டம் துவங்கி வைக்கப்படும் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பூவிருந்தவல்லி முதல் கலங்கரை விளக்கம் வரையிலான வழித்தடம் என்பது 26.1 கிலோ மீட்டர் நீளமாகும். அது 4th phase–ல் வருகிறது; 3rd phase ஒன்று கொடுத்திருக்கிறோம். 3rd phase–ல் சோழிங்கநல்லூர் முதல் SIPCOT வரை 13.13 கிலோ மீட்டர் நீளத்திற்குக் கொடுத்திருக்கிறோம்.

முற்பகல் 11–40

அதுமட்டுமல்ல; சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையத்திலிருந்து சோழிங்கநல்லூர் வரை 30.66 கி.மீ. நீளத்திற்கு 5–வது கட்டத்தில் கொடுத்திருக்கிறோம். மொத்தம் 5 கட்டங்களாகப் பிரித்திருக்கிறோம். 1–வது கட்டம், 2–வது கட்டம், 3–வது கட்டம், 4–வது கட்டம், 5–வது கட்டம் என, மொத்தம் 5 கட்டங்களாகப் பிரித்திருக்கிறோம். இவற்றில் 4–வது கட்டத்தின் திட்டப் பணிகள் வந்துள்ளன. இதற்கு Asian Development Bank–லிருந்து loan கேட்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதலளித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், Asian Infrastructure Investment Bank–லிருந்து loan கேட்கலாம் என்றும்

சொல்லியிருக்கிறார்கள். New Development Bank–லிருந்து நிதி உதவி கேட்டிருக்கிறோம். நிதி உதவி வந்தவுடன் உடனடியாக சென்னை கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி வரையிலான 26.01 கி.மீ. நீளத்திற்கு திட்டப் பணிகள் விரைவாக நடைபெறும் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

அதுமட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பல்வேறு கேள்விகளைக் கேட்டிருக்கிறார். நில எடுப்புப் பணிகள் எல்லாவற்றையும் நாங்கள் முடித்துவிட்டோம்; அங்கு மண் பரிசோதனையையும் செய்துவிட்டோம்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதியுதவி பெறுவதற்கு அனுமதி கொடுத்துவிட்டார்கள். Japan பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி உதவி 2nd phase–க்குக் கொடுத்துவிட்டார்கள். அந்த முகமை 2nd phase–க்கு நிதி கொடுத்துவிட்டதால், 3rd phase–க்கு கொடுக்க மாட்டார்கள். அதனால் ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) மற்றும் New Development Bank ஆகிய பல்வேறு வங்கிகளின் நிதி உதவியைப் பெறுவதற்கு மாநில அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார். அதன் அடிப்படையில் உடனடியாக திட்டப் பணிகளும் அதோடு சேர்ந்து வரவேண்டும். இந்த 5 கட்டப் பணிகளும் முழுமையாக முடிந்தால்தான், சென்னை, ஒட்டுமொத்தமாக போக்குவரத்து நெருக்கடி இல்லாத மாநகரமாகத் திகழும் என்பதில் இந்த அரசு மிகக் கவனமாக இருக்கிறது.

மாதவரம்–சோழிங்கநல்லூர் வரை, மாதவரம்–சென்னைப் புறநகர் பேருந்து நிலையம் வரை உள்ள 52.01 கி.மீ. நீளமுள்ள வழித்தடம் தொடர்பான திட்டப் பணிகளுக்கு மத்திய அரசின் நிதிப் பங்கு பெறப்பட்டவுடன், உடனடியாக அந்தத் திட்டப் பணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டுவார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், மெட்ரோ இரயில் திட்டப் பணியின் தொடர்ச்சியாக, சென்னை கலங்கரை விளக்கம்–பூவிருந்தவல்லி திட்டப் பணியும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள், உரையை முடியுங்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு நடைபெற்ற மானியக் கோரிக்கையில் இதே பதிலைத்தான்

சொன்னார்கள். இப்போதும் அதே பதிலைத்தான் படிக்கிறார்கள். உங்கள் ஆட்சியை மிகச் சிறப்பான ஆட்சி என்று சொல்கிறீர்கள், இன்னும் 10 மாதங்களில் தேர்தல் வர இருக்கிறது. உங்களுடைய நன்மையைக் கருதி சொல்கிறேன்; 10 மாதங்களுக்குள் இந்தத் திட்டத்தைத் துவக்கினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சியில் 11,000 கோடி ரூபாய் நிதி வாங்கி வந்தோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்; அந்த நிதியை வாங்கி வந்ததில் எத்தனை இடர்பாடு என்பது தெரியுமா? வட்டிக்குக் கூட ஆகவில்லை. 1st phase–ல் நில எடுப்புப் பணி; delay process; நீண்ட கால திட்டப் பணி போன்ற காரணங்களினால் மிகவும் சிரமம் ஏற்பட்டது. அதற்கான வட்டி எல்லாம் சேர்த்து ரூ.14,000 கோடி, ரூ.18,000 கோடி என்று உயர்ந்து, இறுதியில் 19,000 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துவிட்டது. மத்திய அரசு பங்கு, மாநில அரசு பங்கு எல்லாம் சேர்த்து ரூ.19,000 கோடியில் அந்த முதற்கட்ட திட்டப் பணி, எல்லாம் முடிவடைந்து, தற்சமயம், நீல வகை சாலையில் (Blue Line) இரண்டு வகை சாலையாக நாங்கள் பிரித்திருக்கிறோம். அந்தச் சாலையில் போய்க் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக சென்னையில் உள்ள போக்குவரத்து நெரிசலை, மக்கள் நெரிசலை கவனத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னையில் புதிய metro வழித்தடம் வேண்டும். அது வந்தால்தான் எளிதான பயணம், சுகமான பயணம், இனிதான பயணம் நிறைவான பயணம், A/c வசதியோடு செய்யலாம். ஏனென்றால், நீங்களே பார்த்திருப்பீர்கள்; சென்னையில் 1st phase முடிந்து, Metro Train வந்த பிறகு, flight–ஐ பிடிப்பதற்கு மக்கள் அதிக அளவில் வண்ணாரப்பேட்டையிலிருந்து செல்கிறார்கள்; சென்னை Central–லிருந்து செல்கிறார்கள். இதுபோன்ற சூழ்நிலைதான் தற்போது இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களது இந்த அரசு, முழு கவனம் செலுத்தி, கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி வரையிலான திட்டப் பணியை விரைந்து முடித்திடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.